# இசைக்கனிகள்

இசை
34



தமிழர் பண்ணை
திருச்சிராப்பள்ளி



'முத்தமிழ்க் கலா வித்துவரத்தினம்'

அமரர் அவ்வை சண்முகம் அவர்கள் நினைவாக

மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்துக்கு

அன்புடன் அளிக்கப்பட்டது.

**27-1-1979**

முதற் பாகம்

# இசைக்கனிகள்

[பாடல்கள்]

★

இயற்றியோன் :

என். எஸ். சிதம்பரம்.

மதுரை காமராசர் பல்கலைக்கழ
அவ்வை
தி. சு. சண்முகம் நூலகம்.
தமிழியல் துறை

★

தமிழர் பண்ணை வெளியீடு
மதுரை ரோடு :: திருச்சிராப்பள்ளி

விலை ரூ. 1—8—0

# பதிப்புரை

இன்று முன்னணியில் சிறந்து விளங்கும் இசைப் பாவலர்களில், அன்பர் என். எஸ். சிதம்பரமும் குறிப்பிடத் தக்கவர். நல்ல எழுத்தாளர். பத்திரிகைத் துறையிலும் சில ஆண்டுகள் பணியாற்றியவர். இன்று அவரது பாடல்கள் இசையரங்குகளிலும், வானொலியிலும் முழங்குகின்றன. அவரது எழுத்து, இசை நாடகங்களும் அடிக்கடி வானொலியில் ஒலிபரப்பாகியுள்ளன. இசை மணமும், இன்பத் தமிழ் மணமும் ஒருங்கே கமழும் அவரது இனிய பாடல்களைத், தமிழகப் பெருமக்களின் இசையுள்ளங்களில், தமிழர் பண்ணையின் முதல் வெளியீடாக மலரச்செய்து, கனிய வைக்கின்றோம். அருட்தவ யோகி ஸ்ரீசுத்தானந்த பாரதியார் அவர்கள் தமது அணிந்துரையில் குறிப்பிட்ட வண்ணம், பாடல்களாகிய கனிகள் "செந்தமிழ் பாடிச் சித்தம் களிந்திட" வந்தவை. "தமிழிசை வண்டுகள் உண்டு, ஓங்காரம் புரிய" வேண்டுமென்னும் பெரு விழைவுடன் இசைக்கனிகளை வழங்குகின்றோம். கனிகளின் அமிழ்தச் சுவை கண்டு, தமிழகம் இன்புறுக.

**தமிழர் பண்ணை பதிப்பகத்தார்.**

# சமர்ப்பணம்

இசையென்று சொல்லுவதில்தான் எவ்வளவு இன்பம் தோய்ந்திருக்கின்றது! ஆம், இசையே உலகம்! இசையே வாழ்வு!! இசையே தெய்வம்!!! இசை கேட்டு, இதயங்கனியாத உயிரும் உயிராமோ?

இசைப்பாடல்கள் இயற்ற வேண்டுமென்னும் பேரார்வத்தின் விளைவாக வெளிவந்தவையே இவ்விசைக்கனிகள். ஏழிசையாயும், இசைப்பயனாயும், எல்லாம்வல்ல மெய்ப்பொருளாயும் இலங்குகின்ற இசைத் தெய்வத்தின் திருவடி மலர்கட்கு, இவ்விசைக் கனிகளை எனது உள்ளங்கனிந்த அன்புக் காணிக்கையாகச் சமர்ப்பிக்கின்றேன்.

இசையரங்குகளிலும், வானொலியிலும் ஏற்ற இசையுடன் பாடியும், இசைக்கருவிகளில் வாசித்தும்வரும் பிரபல நல்லிசைப் புலவர்கள் எல்லோருக்கும் என்றென்றும் யான் மிகக் கடமைப்பட்டுள்ளேன். சென்னை தமிழ் இசைச் சங்க வெளியீடாகிய "தமிழ் இசை மலர்"களிலும், "செட்டிநாடு", "பிரசண்ட விகடன்", "தேவி", "கலைவாணி", "மின்னல்" ஆகிய இதழ்களிலும் "சிக்கல் தல" வெளியீடுகளிலும் இசைக்கனிகளில் சில வெளிவந்துள்ளன. வானொலியில் "புதிய பாடல்கள்" என்னும்

தலைப்பில், இசைக்கனிகள் பல, ஒலிபரப்பில் இடம்பெற்றுள்ளன.

இவ்விசைக் கனிகளைத் தமிழக இசை யன்பர்கட்கும், புலவர்கட்கும் வழங்கும் பணியை விருப்புடன் ஏற்றுத், தாமே வெளியிட முன்வந்த "தமிழர் பண்ணை" உரிமையாளர் திரு ந. மா. மணி அவர்கட்கும், இசைக்கனிகளைக் கண்ணுற்று ஏற்றதொரு அணிந்துரையை, உள்ளங் கனிந்து உவப் புடன் அளித்துதவிய உத்தமப் பெருந்தகை அருட்தவ யோகி ஸ்ரீசுத்தானந்த பாரதியார் அவர் கட்கும், அருமைச் சகோதரரினும் அன்பு காட்டி, ஆர்வமூட்டி, மேன்மேலும் இக் கலைப் பணியில் என்னை ஊக்குவித்த எனது ஆப்த நண்பரும், சிறந்த கலைஅறிவு நிறைந்தவருமான திரு தி. து. மீனாட்சிசுந்தரம் பி. ஏ., பி. எல்., அவர்கட்கும் எனது இதயங் கனிந்த பெருநன்றி என்றென்றும் உரியதாகுக.

இசை வாழ்க! எங்கெங்கும் இசை மணம் கமழ்க!! இசை பொருந்தி, எல்லா உயிர்களும் இன்புறுக!!! வணக்கம்.

திருச்சிராப்பள்ளி,
22—3—'50.

அன்பன்,
என். எஸ். சிதம்பரம்.

அவ்வை
சண்முகம் நூலகம்

# இன்ப விநாயகனே!

**இராகம்: உதயரவிசந்திரிகா.** **தாளம்: ஆதி.**

### பல்லவி

இன்ப விநாயகனே—உன்
எழில்மலர்ப் பாதம் பணிந்தேனே —(இ)

### அநுபல்லவி

அன்பமர் சோலையில் அமர்ந்திடும் அரசே
ஆதாரம் நீயே ஆண்டருள் வாயே —(இ)

### சரணம்

இதய மலர்தனில் இனித்திடும் கனியே
என்றும் நானுன் அன்பன் இனியே
நிதமும்உன் அருட்புகழ் நினைந்திடல் வேண்டும்
நெஞ்சம் வஞ்சம் நீங்கிடல் வேண்டும் —(இ)

# வேண தெல்லாம் தருவான்!

இராகம்: கௌளை. தாளம்: ஆதி.

பல்லவி

வேண தெல்லாம் தருவான்—விநாயகன்
விருப்புடன் அவன்கழல் பணிந்திடு மனமே—(வே)

அநுபல்லவி

வீணான துயர்தரும் வெவ்வினை களையே
வீழ்த்திடுவான்—உனை வாழ்த்திடுவான் மிக—(வே)

சரணம்

நல்லவர் மனத்தினில் மேவிடும் நாதன்
நற்றவத்தோர் சூழ்ந்திடும் அருட் பாதன்
வல்லமெய்ப் பொருளான் வகைமிகும் தெருளான்
வஞ்சனை நெஞ்சினில் கொஞ்சமும் வசியான்—(வே)

# உறுதி சொல்லுவாய்!

இராகம்: தோடி. தாளம்: ஆதி.

## பல்லவி

உறுதி சொல்லுவாய் உத்தமனே நீ
உலகில் நிலையாய் உய்ந்திடவே நல் —(உ)

## அநுபல்லவி

நறுந்திரு நின்பெரும் போதம் நல்கி
நயம்பெருக்காய் நல்லவனே நீ எனக்கு —(உ)

## சரணம்

செந்தமிழ் பாடிச் சித்தம் கனிந்திட
சிறுமை நீங்கி செல்வம் ஓங்கிட
உந்தனை வந்தனை செய்யும் உத்தமரை
உளத்தில் நினைந்து புண்ணியம் புரிந்திட —(உ)

# அடைக்கலமானேன்!

இராகம்: ஹம்ஸப்ரமரி. தாளம்: ஆதி.

## பல்லவி

அன்பால் உன்பால் அடைக்கல மானேன்
அழகனே அருங் குழகனே பெரும் —(அ)

## அநுபல்லவி

இன்ப வாழ்வருள் தயா நிதியே
இடர்கள் நீக்கி எனையாள் பதியே —(அ)

## சரணம்

அன்னையினும் நல் அன்புமிக்கவனே
அணைக்கும் தன்மையில் இணையற்றவனே
உன்னையே நான் நம்பியுள்ளேனே
உத்தமனே நீ உண்மைசொல்வாயே —(அ)

# எல்லாம் வல்லவன்!

இராகம்: கீரவாணி. தாளம்: ஆதி.

### பல்லவி

எல்லாம் வல்லவன் எம்பெருமான் என
எண்ணியே தினம் பண்ணிசைப்பாய் நீ —(எ)

### அநுபல்லவி

நல்லார்க்கும் மிகப் பொல்லார்க்கும் அவன்
நடுநின்றே அருள் நலமே செய்வான் —(எ)

### சரணம்

அண்ட சராசரம் அவன்படைப் பாகும்
அதிலுறை உயிர்கள் அவன்மய மாகும்
கண்டிதை நீயே கருத்துட னுய்வாய்
கண்ணிய மனமே புண்ணிய மெய்துவாய்–(எ)

# ஞானம் எதுவோ சொல்வாய்!

இராகம்: சாமா. தாளம்: ரூபகம்.

### பல்லவி

ஞானம் எதுவோ சொல்வாய்
மோன மான பரமே —(ஞா)

### அநுபல்லவி

தீன கருணை நிதியே
வான நாடர் பதியே —(ஞா)

### சரணம்

பூதல மீதினில் உன்றன்
புண்ணிய ஆடலறியேன்
ஆதர வான மணியே
அன்பன் யானும் உய்யவே —(ஞா)

# எங்கும் நிறைந்திடும் பரமா!

இராகம்: ஹம்ஸத்வனி. தாளம்: ஆதி.

## பல்லவி

எங்கும் நிறைந்திடும் பரமா—உன்றன்
பொங்கும் கருணையைப் புகன்றிடத் தரமா?—(எ)

## அநுபல்லவி

அருளால் உலகினை ஆக்கி யமைத்தாய்
தெருளால் அனைத்தையும் திறம்படச் சமைத்தாய்
—(எ)

## சரணம்

ஞாலம் மேவிடும் கோலக் கடலும்
நீல வானமும் நின்பெரும் ஆக்கம்
பண்ணினில் இசையாய்ப் பரவிடும் பாதா
கண்ணினில் ஒளியாய்க் கலந்திடும் நாதா —(எ)

# நன்னிதியே!

**இராகம்: குந்தலவராளி.** **தாளம்: ரூபகம்.**

பல்லவி

நன்னிதியே நடத்தரசே
நறுமலரே நவமணியே —(ந)

அநுபல்லவி

சந்நிதியே சார்ந்துநின்றேன்
சந்ததம்உன் நினைவுடனே
சமயமிதே வந்தருள்வாய்
தமியேன் இடர் தீர்ந்திடவே —(ந)

சரணம்

கருதிடுபவர் துயர்களைந்திடும்
கருணாகரன் நீயன்றோ
கருவிலுறும் சிசுவினையும்
காத்தருள்பவன் நீயன்றோ
அருள்மேவும் அன்புருவாய்
அனைத்துயிர்க்கும் ஆதரவாய்
அமைந்தபெரும் ஆண்டவனே
அடியேன்எனை ஆண்டருள்வாய் —(ந)

# மாபெருந் தயாநிதியே!

இராகம்: பூர்விகல்யாணி. தாளம்: ஆதி.

## பல்லவி

மாபெருந் தயா நிதியே—ஞான
மாமணியே உயர் கருணை மூர்த்தியே —(மா)

## அநுபல்லவி

தேடருந் திவ்ய தேவநல் லழகே
தேனுறும் இன்பத் தீஞ்சுவை அமிழ்தே —(மா)

## சரணம்

ஆணவம் நீங்கிய அகத்தினில் மேவிடும்
அருமறைப் பொருளே அருள்சேர் ஒளியே
வீண்அவ மாயையில் விரைந்துழ லாமல்
வினைகள் தீர்ந்தே விளங்கிட அருள்வாய் —(மா)

# காண விரும்பினேன்!

இராகம்: பைரவி. தாளம்: ஆதி.

## பல்லவி

காதலினால் உன்னைக் காண விரும்பினேன்
கருதியவர்க் கருளும் கருணைவரனே மெய்க்—(கா)

## அநுபல்லவி

சோதனை நீசெய்தால் சேயேன் என்செய்வேன்
வேதனை நீக்கினால் அடியனேன் உய்வேன் —(கா)

## சரணம்

நல்லன்பரை நாடி நலமுடனே கூடி
நாதா நாதாஎன நன்றுன்னைப் பாடி
வல்ல மாயைதன்னை வகையாய்ப் பொன்றுவித்து
வாய்மையால் பொய்ச்சுக வழிகளை வென்றுவித்துக்
—(கா)

# ஆடிடுமே உலகம்!

**இராகம் : அடாணு.** **தாளம் : ஆதி.**

**பல்லவி**

ஆட்டிவைக்கின்றபடி ஆடிடுமே உலகம்
அருட்திரு விளையாடல் அற்புதம் ஐயாநீ —(ஆ)

**அநுபல்லவி**

நாட்டிவைக்கின்றபடி நாடிடுமே என்றும்
நன்மையிலும் கெட்ட தீமையிலும் தானே —(ஆ)

**சரணம்**

சூரியர் சந்திரரை சூன்யமு மாக்கிடலாம்
சூழ்கடல் பொருளெல்லாம் பாழ்பெறச் செய்திடலாம்
பேரரிய பெரியோய் பெரிதும் மனம்வைத்தால்
பேரண்டங் களெல்லாம் சீருற ஓங்காதோ ? –(ஆ)

# கரைகின்றேனே!

இராகம்: கந்தர்வமனோகரி. தாளம்: ரூபகம்.

பல்லவி

என்றும் நான் உனை மறவா
எண்ணமும் நிலையும் அருள்வாய் —(எ)

அநுபல்லவி

உன்றன் அன்பின் பெருக்கையுன்னி
உன்னிக் கரைகின் றேனே —(எ)

சரணம்

அகந்தையை அழித்திடும் ஐயா—உன்
அன்பே வேண்டும் மெய்யா
சுகந்தரும் தமிழ்நிதம் பாடியே—மிகச்
சுத்த மனத்துடன் கூடியே —(எ)

# அறிந்தவன் நீயே!

இராகம்: வந்தனதாரிணி. தாளம்: ஆதி.

## பல்லவி

அறிந்தவன் நீயே
ஆண்டவனே என்னை —(அ)

## அநுபல்லவி

அறிவின் ஒளியாய் இலங்கும் ஐயனே
அறியாதவன் யான் அல்லல்படும் நிலை —(அ)

## சரணம்

கபடர் எண்ணமும் கடந்தவர் இதயமும்
கயமை புரியும் கள்ளர் உள்ளமும்
தபஞ்செய்யும் முனிவர்தம் சித்தமும்
தத்துவம் அனைத்தும் எந்தன் தாபமும் —(அ)

# எனை முகம் பாராய்!

இராகம்: ஆபோகி. தாளம்: ஆதி.

பல்லவி

பரம்பொருளே எனைமுகம் பாராய்
பாதகனாயினும் உனதமிழ்தம் தாராய் —(ப)

அநுபல்லவி

உரமுறும் உன்னருள் நலம்பெற விழைந்தேன்
உய்கதி உன்வழி எனஅதில் நுழைந்தேன் —(ப)

சரணம்

சத்தியம் சன்மார்க்கம் சாந்தமும் தயையும்
சார்ந்து நாயேன் தேர்ந்திடச் செய்வாய்
வித்தும் விளைவும் பயனும் ஆனாய்
விமலநல் முதலே விரைந்து வந்தருளே —(ப)

# பண்பினைத் தருவாயே!

இராகம் : வலஜி. தாளம் : ஆதி.

பல்லவி

பக்குவமானஉயர் பண்பினைத் தருவாயே
பாரினிலே யார்க்கும் பாதகம் நினையாத —(ப)

அநுபல்லவி

தக்கவன் நீயென்றே தயாபரா நின்பால்
தாபமதை யானும் தயைபெறவேஉரைத்தேன் –(ப)

சரணம்

அகிலம் செழித்திடவே அருள்மழை பொழிவாயே
அச்சமகற்றி நல்ல ஆண்மையை அருள்வாயே
இகமும் பரமும்தனில் இணையறும் நின்பதமே
இனிதே நினைந்தென்றும் இன்புறச் செய்வாயே–(ப)

# என்னை யாளும்!

இராகம்: அசாவேரி. தாளம்: திரிபுடை.

பல்லவி

மண்ணே கதியாய் நம்பி மாளேன் மனமும் வெம்பி
பண்ணே இசைத்து நாளும் பணிவேன் என்னை யாளும்
—(ம)

அநுபல்லவி

பொன்னை நினைந்தே வீணாய்ப் புலம்பித் தவித்திடேனே
அன்னை தந்தை யாவும் அரசே நீயே ஆவாய் —(ம)

சரணம்

பணியே யியற்றும் வாழ்வில் பண்பே மிகவும் கண்டு
அணியே மகிழ்ந்து பெற்றே அறமே பிடியாய்க் கொண்டு
எல்லா உயிர்க்கும் நல்ல இதமே புரியும் நோக்கில்
பொல்லா இடர்கள் நீங்கிப் புனிதமாய் உய்வேனே—(ம)

# தண்டிப்பதுண்டோ?

இராகம்: ஹம்ஸநாதம். தாளம்: ஆதி.

## பல்லவி

தஞ்ச மென்றோரைத் தண்டிப் பதுண்டோ?
தமியேனுக் குரைப்பாய் தற்பரனே —(த)

## அநுபல்லவி

அஞ்சல் என்றே அபயந் தருவதுன்
அருள்தன்மைக்கோர் அழகல்லவோ —(த)

## சரணம்

வஞ்சக நெஞ்சால் வாய்மையும் துறந்தேன்
வகையுடன் உன்னை வழுத்தவும் மறந்தேன்
நஞ்சனை யோரை நாடியும் நொந்தேன்
நான்இனி உன்பதம் நம்பியும் வந்தேன் —(த)

# நம்பி வந்தேன் ஐயா!

இராகம்: ஓங்காரகோஷணி. தாளம்: ரூபகம்.

பல்லவி

நம்பி வந்தேன் ஐயா—என்றும்
நல்லவர் வணங்கும் வல்லஉன் சந்நிதி —(ந)

அநுபல்லவி

உம்பர் முனிவர் உன்னிடற் கரிய
உத்தமப் பெரியோய் உன்பெரும் உயர்வினை —(ந)

சரணம்

கபடஞ் சூழ்ந்த கருத்தால் தாழ்ந்தேன்
கைப்பிடிப் பாயெனில் கடையேன் வாழ்ந்தேன்
சுபமணஞ் சேர்ந்திடும் சுக வாரியே
சுத்த மனத்தவர் நித்தம் தொழும்உனை —(ந)

# பரவசமாமே!

இராகம்: சுத்ததன்யாசி. தாளம்: ஆதி

## பல்லவி

பார்க்கப் பார்க்கவுமே பரவசமாமே—அருட்
பரமனே உன்னைப் பாமலர்கள் சூட்டிப் —(பா)

## அநுபல்லவி

தீர்க்கமில்லா ஞானத் தீங்கனியே தேனே
திருவருள் திரவியமே விரவிய நின்னையென்றும்-(பா)

## சரணம்

வெட்ட வெளிதன்னில் வீசிடும் தென்றல்நீ
வேதப் பொருளும்நீ நாத சுகமும்நீ
விட்ட குறையாமோ தொட்ட குறையாமோ
விரைமலர்த்தாள் யானும் விரும்பிப் பணிவதுமே
—(பா)

# சத்திய தயா நிதியே!

இராகம்: கௌரிமனோகரி. தாளம்: ஆதி.

பல்லவி

சத்திய தயா நிதியே—எனையே
சதா காலமும் காத்தருள் பதியே —(ச)

அநுபல்லவி

நித்திய சுகமே நினைப்பவர் அகமே
நிர்மல குருவே நிரஞ்சனத் திருவே —(ச)

சரணம்

அற்புத பொற்பத அறமானு கூல
அமர அமல அருங்குண சீல
தற்பர சிற்பர சின்மய வெளியே
தத்துவ சத்துவ சிதம்பர ஒளியே —(ச)

# அன்பொன்றே வேண்டுகின்றேன்!

இராகம்: கேதாரகௌள. தாளம்: ஆதி.

## பல்லவி

அன்பொன்றே வேண்டுகின்றேன்—இறைவா
அதையே எனக்குத் தந்தருள்வாய் உன் —(அ)

## அநுபல்லவி

இன்பமென் பதெல்லாம் அன்பினுள் அடங்கும்
என்றஉண்மையை யான் தெளிந்தேன் ஆதலின்-(அ)

## சரணம்

அன்பின் கனிவாம் அருள்நலம் பெறவே
அல்லும் பகலுமே அணுகிநின் றேனே
இன்பன் நீயும் என்பால் தயையே
இனிதே சுரந்தே ஏற்பதுன் பாரமே —(அ)

காமராசர் பல்கலைக்க
அவ்வை
முகம் நூல

# ஆண்டவன் திருப்பணியே!

இராகம்: ஆகிரிநாட்ட. தாளம்: ஆதி.

### பல்லவி

ஆண்டவன் திருப்பணியே புரிவாயே
ஆத்மசுகம் அடைவாய் மனமே தினமே—(ஆ)

### அநுபல்லவி

வேண்டும் வரங்கள் பெறுவாயே—நீ
வினைகள் நீங்கி யின்புறு வாயே —(ஆ)

### சரணம்

மனநிறை வுடனே மதிநிறை வுடனே
மடமை களைந்தே கடமை தெளிந்தே
நினைவும் செயலும் ஒருநிலை நின்றே
நிமலா நிமலா என்றே நிதமும் —(ஆ)

# நன்றி மறந்தே வாழேன்!

இராகம்: சரசாங்கி. தாளம்: ஆதி.

## பல்லவி

நன்றி மறந்தே வாழேன்—இறைவா
நானிலந் தன்னில் நாயினும் கடையாய் —(ந)

## அநுபல்லவி

நன்றுன் அருள்நயம் நான்அறிந் தேனே
நாளும் மலர்ப்பதம் நான்மற வேனே —(ந)

## சரணம்

உயிரினில் கலந்து உளத்திலில் கனிந்து
உணர்வினில் இலிக்கும் உன்னத வேதா
மயங்கியும் வீணே மடியேன் அடியேன்
மகிமையும் தெளிந்தே மாபணி புரிவேன் —(ந)

# வாழ வைப்பாய்!

இராகம்: பூஷாவளி. தாளம்: ஆதி.

## பல்லவி

வந்தே நல்வரம் தந்தே—என்னை
வாழ வைப்பாய் குருபரனே நீ —(வ)

## அநுபல்லவி

சிந்தை திரிந்தே நொந்தேன் நாளும்
சிவசண் முகனே செஞ்சொற் குகனே —(வ)

## சரணம்

அமரர் துயர்தனை அகற்றிய சீலா
அயன்தன் அகந்தையை அழித்த வேலா
குமர வடிவாய்க் குணப்பெருங் குன்றாய்க்
குலவிடும் கந்தா குணமே தருவாய் —(வ)

# குன்று வாழ்வருள் ஐயா!

இராகம்: சாருகேஸி. தாளம்: சாபு.

## பல்லவி

குன்று வாழ்வருள் ஐயா—குமரய்யா
குவலயம் புகழ்திரு குகனே மெய்யா —(கு)

## அநுபல்லவி

மன்றோங்கி நடமாடிடும் பெருமான்
மைந்தா முகுந்தன் மருகா முருகா —(கு)

## சரணம்

நெஞ்சினில் தூய்மை நிலைத்திட தினமும்
நினைந்துரு கிடும்பெரு நிலையருள் செய்வாய்
வஞ்சமில்லா நல் வாய்மை யளித்தே
வையமே வியந்திடும் வரமே தருவாய் —(கு)

# சக்தி வேலவா!

**இராகம்: வாசஸ்பதி.** **தாளம்: ஆதி.**

பல்லவி

சண்முகப் பிரபோ சக்தி வேலவா
சங்கரன் புதல்வா சரணம் சரணம் —(ச)

அநுபல்லவி

பண்கொண் டுன்னைப் பணிவார்க் கென்றும்
கண்கண்ட தெய்வம் நீதான் அன்றோ? —(ச)

சரணம்

இருள்வினை வசத்தால் இப்புவி தன்னிலே
எளியேன் மிகவே இடர்களுற் றேனே
அருள்செய் கந்தா அடுத்தேன் உன்னையே
அமரர் துதிசெய் அமல முதல்வா —(ச)

# குமரனைக் கண்டாயோ!

இராகம்: பேகட. தாளம்: சாபு.

## பல்லவி

கோல மயிலேறும் குமரனைக் கண்டாயோ
குறமகள் வள்ளியவள் குலவும் வடிவேலன் -(கோ)

## அநுபல்லவி

சீலம் வளரும்திருச் செந்தூர்தனில் மேவும்
சிங்கார சுப்ரமண்யன் மங்காத புகழுள்ளோன்
—(கோ)

## சரணம்

நீலக்கடல் காட்சியில் நெஞ்சம் லயித்திடுவான்
நினைத்தவர் மனத்தினிலே நிலைபெறத் திகழ்ந்திடுவான்
ஆலமுண்ட கண்டன் அருட்சிவப் பெருமான்தன்
அன்பில்தவழ் பாலன் அறுமுகத் திருவாளன் -(கோ)

# வரும் இடரெல்லாம் வரட்டும்!

இராகம்: ஷண்முகப்ரியா. தாளம்: ஆதி.

### பல்லவி

வரும் இடரெல்லாம் வரட்டும்—வந்தால்
வடிவேலன் துணை உண்டென்றிருப்பேன் –(வ)

### அநுபல்லவி

அருமையும் பெருமையும் அழிந்தொழிந்தாலும்
அறுமுகன் பரிவுடன் அருந்துணை புரிவான் —(வ)

### சரணம்

வேலது வந்திடும் வெற்றியும் தந்திடும்
விருப்பமும் கூடிடும் வினைகளும் ஓடிடும்
சீலமும் விளங்கிடும் கோலமும் துலங்கிடும்
செந்தமிழ் விந்தையில் சிந்தையும் லயித்திடும் –(வ)

# கண்டேன் நீ யென்றே!

இராகம்: சாரமதி. தாளம்: ஆதி.

## பல்லவி

கந்தா உனையன்றி காணேன் உலகினிலே
கருதும் பொருளெல்லாம் கண்டேன் நீயென்றே
—(க)

## அநுபல்லவி

மூந்தாத வண்ணம்வினை முழுவதும் போக்கிஎனை
முருகா உன்பேரருள் முற்றும் தந்தாள்வாய்—(க)

## சரணம்

வேலாயுதம் கொண்ட கோலாகல குமரா
சீலா பாலாயெனச் சிந்தித்துநின் றேனே
ஆறு முகங்களுடன் வீறுபெறத் துலங்கும்
பேறுமிக வுடையாய் பெருமானே அருளாய்—(க)

# வரமருள் கந்தா!

இராகம்: வசந்தபைரவி. தாளம்: ஆதி.

## பல்லவி

கன்னித் தமிழால் கசிந்துனைப் பாடிக்
கண்ணீர் பெருக்கிட வரமருள் கந்தா —(க)

## அநுபல்லவி

பொன்னின் நிதியே புகழ்சேர் ஒளியே
புண்ணிய அமுதே எனவே தினமும் —(க)

## சரணம்

வெற்றி வேலா விளங்கும் சீலா
விந்தை புரியும் வீரா தீரா
சுற்றியுன் திருவடி சூழ்ந்திடும் அடியார்
சொல்நலம் கண்டே சிந்தை மகிழ்ந்தே —(க)

# முருகன் என்மனம் புகுந்தான்!

இராகம்: நடபைரவி. தாளம்: ஆதி.

## பல்லவி

முருகன் என்மனம் புகுந்தான்—சகியே
முருகா எனவே தேடுதே மனம் இளம் —(மு)

## அநுபல்லவி

உருகித் தினம்அவன் அன்பைப் பருகிட
உளந்துடித் திடுதே உயர்மால் மருகன் —(மு)

## சரணம்

என்னடி சொல்வேன் அவன்தன் எழிலை
என்றும் மறவேன் அவனருட் பொழிவை
மின்னும் குமரன்அமரர் நாயகன்
மிகவும் நல்லவன் இசையில் வல்லவன் —(மு)

# கண்டுநீ சொல்லவேண்டும்!

இராகம்: ஆந்தோளிகா. தாளம்: ஆதி.

பல்லவி

கண்டுநீ சொல்ல வேண்டும்—சகியே
கந்தனை முகுந்தன் மருகனை முருகனைக் —(க)

அநுபல்லவி

உண்டிட இல்லை உறங்கிட இல்லை
உள்ளமும் நொந்தாள் உத்தமனே எனக் —(க)

சரணம்

காதலை எண்ணிக் கரைந்திடு கின்றாள்
கண்விழி இமையாது காத்திருக் கின்றாள்
வேதனை கொண்டாள் வேலரே என்பாய்
விரைவினில் அன்புடன் வருவீர் என்பாய்— (க)

# எந்த நேரமும்!

இராகம்: காபியன். தாளம்: சாபு.

பல்லவி

எந்த நேரமும் உந்தன் நினைவாய்
இருந்தேன் சுவாமி எனைக்கண் பாரும் —(எ)

அநுபல்லவி

சிந்தையும் கவர்ந்தீர் விந்தையும் செய்தீர்
சேல்விழி மாதென் கோலமும் காண்பீர் —(எ)

சரணம்

வஞ்சியென் மேலே வஞ்சமும் உமக்கோ
வடிவேல் பிடித்த வள்ளலே உரைப்பீர்
கொஞ்சிப் பேசியென் நெஞ்சமும் பறித்தீர்
குலவி மகிழ்ந்தே கலவியும் புரிந்தீர் —(எ)

தேன்குயில் பாடுது தென்றலும் கூடுது
தெள்ளிய மலர்மணம் உள்ளிட நாடுது
வான்மயில் தோற்ற வண்ணமும் பெருக்குது
வருவீர் கருணை புரிவீர் சுவாமி —(எ)

# பிறர்க்குபகாரம்!

இராகம்: ஜோன்புரி. தாளம்: ஆதி.

பல்லவி

பிறர்க்குபகாரம் புரிவதல்லாமல்
பிறவியின் கடமையும் வேறும் உண்டோ? —(பி)

அநுபல்லவி

நெறியது பிரமா நிலையினில் நின்றே
நித்தமும் அன்புடன் சித்தமும் உவந்தே —(பி)

சரணம்

தன்னல மொன்றே நன்னல மென்றே
தரமுடன் எண்ணலும் தகுவதும் அன்றே
இன்னலும் கண்டே இதயமும் கனிந்தே
இரக்கமும் கொண்டே இயல்பினிற் சிறந்தே—(பி)

# அமலச் செல்வியே!

இராகம்: ரீதிகௌளை. தாளம்: ஆதி.

## பல்லவி

அமலச் செல்வியே அருங்கலா வல்லியே
அருள்வளர் அமுதமே அடியிணை சரணம் —(அ)

## அநுபல்லவி

கமல மலர்போல் கனிமுக அன்னையே
கருணை வைத்தாள்வாய் கடையேன் என்னையே-(அ)

## சரணம்

நன்றுஉன் பாதம் நான் பணிந்தேனே
நாளும் உன்நலம் பெற்றிடத் துணிந்தேனே
இன்றும் என்றுமே உன்னை மறவேனே
ஈன்றஎன் தாயே இனிமைசெய் வாயே —(அ)

# அருட் கனிவே!

இராகம்: தன்யாசி. தாளம்: ஆதி.

## பல்லவி

கலைகள் தொழும் அருட் கனிவே—தாயே
கருணையின் வடிவே கலை வாணியே —(க)

## அநுபல்லவி

நிலையாக என்றன் நாவினில் என்றும்
நின்றருள் செய்வாய் நித்திய தேவியே —(க)

## சரணம்

கல்வியின் எல்லையும் கவிதையின் இன்பமும்
கலைமெய்ஞ் ஞானமும் கண்டவள் நீயே
செல்வியுன் சீர்த்திறம் சிறப்புடன் பாடிடும்
செழுங்குண வாழ்வினில் சேர்ந்திட அருள்வாய்-(க)

# நீயே மறுத்திடில் தீதே!

இராகம் : சாருகேஸி. தாளம் : ஆதி.

## பல்லவி

நீயே மறுத்திடில் தீதே—தாயே
நிர்மல நிரஞ்சன தீப ஒளியே —(நீ)

## அநுபல்லவி

சேயேன் நாயேன் சிதைந்திடல் நன்றே
செகமதில் சுகமுற செழித்திடல் என்றே —(நீ)

## சரணம்

எண்ணம் செயல்கள் யாவும் உனதாய்
எண்ணி யிருக்கும் அன்பனை ஏற்பாய்
வண்ணம் பெருகும் நல்ல வளமே
வகைசெய் தயைமிகு கருணை நலமே —(நீ)

# எனக்கு நீ அருள்வாயே !

இராகம் : மார்க்கஹிந்தோளம். தாளம் : ஆதி.

பல்லவி

எனக்கு நீ அருள்வாயே—தாயே
எளியேன் உன்றன் அன்பனல்லவோ ? —(எ)

அநுபல்லவி

உனக்கே என்றன் உடல்பொருள் ஆவியும்
உவந்தே அளித்தேன் உயர்வரம் அருள்வாய் —(எ)

சரணம்

நின்பதம் பணிவதே எனக்கு இன்பம்
நீமறந்தாயெனில் அதுவே துன்பம்
பொற்பதம் பணிந்தேன் கற்பகத் தருவே
போதமும் நீயே நாதமும் நீயே —(எ)

# ஆதி பராசக்தி !

இராகம் : ஆனந்தபைரவி. தாளம் : சாபு

பல்லவி

ஆதி பராசக்தி அம்பிகையே சரணம்
ஆண்டருள்வாய் எம்மை ஆனந்த பைரவி —(ஆ)

அநுபல்லவி

சோதி சுடர்மணியே சுந்தர ரூபிணியே
சூலமுடனே வரும் சுகிர்தமும் நிறைந்தாயே —(ஆ)

சரணம்

சக்தியு மாகிநின்று சகல உயிர்களையும்
சாந்த அருளுடனே ஏந்திடும் எம்தாயே
பக்தியுடன் உன்னைப் பரவிப் பணிந்தோமே
பாரினில் நல்லறமாம் சீர்வளரச் செய்வாய் —(ஆ)

# கடைக்கண் பாரம்மா!

இராகம்: கல்யாணி. தாளம்: ஆதி.

## பல்லவி

கல்யாணி நீஎனைக் கடைக்கண் பாரம்மா
கழலிணை தொழுதேனே கருணை வடிவழகி —(க)

## அநுபல்லவி

சொல்மலரால் உன்றன் சோபிதம் பாடினேன்
சுந்தரியே இன்னும் சோதனை செய்யாதே —(க)

## சரணம்

அம்மம்மா எனவே அநுதினமும் உன்னை
அன்புடன் அழைத்தேனே அருள்நலம் விழைந்தேனே
இம்மகி தலமீதில். ஏற்றதுணை நீயே
இன்பஉன் சக்திதர இதயமும் கனியாயோ —(க)

# ரஞ்சனி நீயே!

இராகம்: ரஞ்சனி. தாளம்: ஆதி.

## பல்லவி

நெஞ்சினில் மேவும் ரஞ்சனி நீயே
நித்திய பூரணி நீயே—தாயே —(நெ)

## அநுபல்லவி

அஞ்சிடச் செய்யும் ஆணவப் பேய்தனை
அகற்றிஎன் அறிவினில் அமர்ந்திடும் ரஞ்சனி—(நெ)

## சரணம்

வஞ்சகம் நீங்கி வாய்மை யோங்கி
வையக மிதினில் வாழ்வகை அருள்வாய்
வஞ்சிக் கொடியே வானக மலரே
வளமார் எழில்சேர் வடிவுயர் ரஞ்சனி —(நெ)

# சித்த ரஞ்சனியே!

இராகம்: சித்தரஞ்சனி. தாளம்: ஆதி.

## பல்லவி

சித்த ரஞ்சனியே என்தாயே
சித்திகள் யாவும் அளிப்பாய் நீயே —(சி)

## அநுபல்லவி

சித்தரும் யோக தவமுனிவரும் தொழும்
செழுங்குண ஞான தருவே திருவே —(சி)

## சரணம்

மாயையின் வழியே மனம் செல்லாமல்
மாண்புறும் நின்னை மறந்து நில்லாமல்
தூயநின் திருவடி துதித்துநின் றிடவே
தேவிநீ மகிழ்வுடன் திருவருள் புரிவாய் —(சி)

# வரமொன்று தந்திடுவாய்!

இராகம்: பிலஹரி. தாளம்: ஆதி.

## பல்லவி

வரமொன்று தந்திடுவாய் - தாயே
வரம்பில் உன்புகழ் பாடி மகிழவும் —(வ)

## அநுபல்லவி

திறமொன்றே வேண்டினேன் சேயேன்
அறந்தனை மறவாது அரும்பணி புரியவும் —(வ)

## சரணம்

அன்னாய் உனது அன்பால் இந்த
அகில உயிர்களும் இன்புறச் செய்வாய்
என்னால் பயனே இல்லையென்றாலும்
எளியேன் விரும்பும் இவ்வரம் அருள்வாய் —(வ)

# எழில்பெறும் மீனாட்சி!

இராகம்: ஜகன்மோஹினி. தாளம்: ஆதி.

## பல்லவி

சங்கம் முழுங்குந்திரு மதுரை நகர்வளரும்
இங்கிதம் பொங்கவரும் எழில்பெறும் மீனாட்சி
—(ச)

## அநுபல்லவி

எங்கும் புகழ்விளங்க இனிய தமிழ்துலங்க
தங்கும் வளமுடனே தனியாட்சி செய்தாய் —(ச)

## சரணம்

பாண்டிய மன்னர்கள் பணிந்து வணங்கிடவே
பைந்தமிழ்ப் புலவர்கள் பரவி மகிழ்ந்திடவே
வேண்டிய அன்பர்கள் வினைகள் விலகிடவே
விந்தை புரிந்துபல வேடிக்கையும் செய்தாய் —(ச)

# நாயகியே சரணமம்மா!

இராகம்: ஆரபி. தாளம்: ரூபகம்.

## பல்லவி

சமயபுரம் மேவியதிரு
நாயகியே சரணமம்மா —(ச)

## அநுபல்லவி

தமையடைந்தார்க் குதவும்பெருந்
தயாபரியே சங்கரியே —(ச)

## சரணம்

கருணையில்நீ கனிந்தவளாம்
கடைக்கண் அருள் சுரப்பவளாம்
அருமையில்நீ தழைத்தவளாம்
அன்பர்துயர் துடைப்பவளாம் —(ச)

# மனமுவந்தருள் செய்!

இராகம்: கனகாங்கி. தாளம்: ஆதி.

பல்லவி

மனமுவந் தருள்செய் கனகாங்கி—உன்
மலரடி தினம்தொழும் என்மன மறிந்து —(ம)

அநுபல்லவி

இனந்தெரிந் தெனக்குன் இன்னருள் தருவாய்
எழில்வளர் அன்பினில் இலங்கிடும் திருவே —(ம)

சரணம்

சினமெனும் குரங்கின் சேட்டையும் அடங்கி
செருக்கெனும் பெருக்கின் செயல்களும் ஒடுங்கி
வினையெனும் பிணியின் வேகமும் தவிர்ந்து
விரிந்த உலகினில் புரிந்த வகைபெற —(ம)

# வணக்கம் வணக்கம் அம்மா!

இராகம்: ஹரிகாம்போதி. தாளம்: ரூபகம்.

பல்லவி

வணக்கம் வணக்கம் அம்மா
வண்ண மலரிணை யடிக்கே —(வ)

அநுபல்லவி

இணக்கம் தருவாய் அம்மா
இன்னருள் தந்தெனை யாளவே —(வ)

சரணம்

சுணக்க மின்றி எனக்கே
சும்மா இருக்க அருள்வையே
கணக்கி லடங்கா நின்புகழ்
கண்டு நானும் மகிழ்வனே —(வ)

சக்தி யென்றுனை அழைப்பேன்
சகலமும் உனதென நினைப்பேன்
பக்தி யோடே நிதமுமே
பணிந்து வேண்டுவன் வரமுமே —(வ)

# எனக் கருளே!

இராகம்: கீரணுவளி. தாளம்: ஆதி.

பல்லவி

இதமாய் எனக்கருளே அம்பா - உன்
இணையடி என்றும் தொழுது மகிழ்ந்திட —(இ)

அநுபல்லவி

விதம் விதமான வினைகள் வருத்த
வேறுகதி யின்றி வேண்டி வந்தேன் —(இ)

சரணம்

உன்பெயர் உரைப்பதில் உயர்வு கண்டேன்
உளமதில் உனையே சதமெனக் கொண்டேன்
என்பெயர் நீ அறியாயோ அன்னையே
என்றும் என்வாய் பாடும் உன்னையே —(இ)

# கவிதை பாட அருள்வாய்!

இராகம்: லதாங்கி. தாளம்: ஆதி

## பல்லவி

கவிதை பாட அருள்வாய் - தேவி
கானயின்பமுடன் கருணைத் தமிழினில் —(க)

## அநுபல்லவி

நவரசங்களுமே மேவி நற்றமிழ் அமிழ்தம்
நன்கு தெளிந்துன் நல்லிதம் கூட்டும் —(க)

## சரணம்

உண்மையும் உணர்வும் ஊறி நிறைந்திட
ஊனமும் ஈனமும் மங்கி மறைந்திட
தண்மையும் பெண்மையும் ததும்பிப் பொங்கிட
தாய் நாடென்றும் தன்மையில் ஓங்கிட —(க)

# அற்புத தாண்டவம்!

இராகம்: காம்போதி. தாளம்: ஆதி.

பல்லவி

அற்புத தாண்டவம் ஆடினார்
அம்பல வாணர் அன்பு வெளியினில் —(அ)

அநுபல்லவி

கற்பிதம் செழிக்க கலைகள் விழிக்க
கற்றவர் மேவிய நற்றவத் தில்லையில் —(அ)

சரணம்

நானெனும் அகந்தை நசிந்து மாய்ந்திட
நானிலம் எங்கும் நடுக்கம் சாய்ந்திட
ஓமெனும் பிரணவம் உயர்ந்து துலங்கிட
ஓங்கும் அறிவினில் உத்தமம் இலங்கிட —(அ)

# காண வேண்டும்!

இராகம் : ஜயந்தஸேன. தாளம் : ஆதி.

பல்லவி

காண வேண்டும் மனமே
தில்லையில் —(கா)

அநுபல்லவி

ஆணவப் பெருக்கால் நேர்நின்றாடும்
அணங்கை இணங்கச் செய்யும் தாண்டவம் —(கா)

சரணம்

அயனும் மாலும் தாளம் போடவும்
அம்பல வாணன் அழகாய் ஆடவும்
நயமிகு நாரதர் தும்புரு பாடவும்
நல்லவர் வியந்து புகழ்ந்திடும் நடனம் —(கா)

# தில்லை நாதா!

இராகம்: ரிஷபப்ரியா. தாளம்: சாபு.

பல்லவி

தில்லை நாதா தெய்வ விநோதா
தீதில்லாநல் தெருள்மலர்ப் பாதா —(தி)

அநுபல்லவி

கல்லும் கசியும் உன்எழில் கண்டால்
காமமும் கருகும் சேமமும் பெருகும் —(தி)

சரணம்

உன்பெருங் கோலம் கண்டென துள்ளம்
உவகை கொண்டது உய்வகை விண்டது
அன்புறும் நின்பதம் எனக்குச் சதமே
அற்புதம் புரிந்தே அருள்வாய் இதமே —(தி)

# அவனற்புதமே!

இராகம்: சங்கராபரணம். தாளம்: ஆதி.

## பல்லவி

அவனற் புதமே தெரிவாய் மனமே
அம்பலந் தன்னிலே நடனம் ஆடிடும் —(அ)

## அநுபல்லவி

பவநோய் தவிர்த்தே பெருவாழ் வருளும்
பரம தயாளன் பக்தர்க் கனுகூலன் —(அ)

## சரணம்

குளிர்ந்த முகத்தினில் மிளிர்ந்திடும் சாந்தமும்
குணம்வளர் நற்றவர் சூழ்ந்திடும் பாந்தமும்
வெளிதனில் புரிந்திடும் தாண்டவ விந்தையும்
விரவிய கோலன் திரவிய சீலன் —(அ)

# பாடும் வரமருள்வாய்!

**இராகம் : தோடி.** **தாளம் : ஆதி.**

### பல்லவி

ஆடும் அழகினிலே கூடும் எழிலின்பம்
பாடும் வரமருள்வாய் சூடும் மதியோனே —(ஆ)

### அநுபல்லவி

தேடும் பொருளாகித் தில்லை வெளியினிலே
தீம்தக தீம்எனவே திருநடம் புரிந்தோனே —(ஆ)

### சரணம்

தாண்டவனே என்னை யாண்டவனே உன்னைத்
தஞ்சம் புகுந்தேனே வஞ்ச மகன்றேனே
தூண்டா மணியாகித் தீண்டாச் சுடராகித்
துரிய நிலைகொண்ட பெரிய கலையோனே —(ஆ)

# மன்றுள் ஆடிய தாண்டவனே!

இராகம்: சரஸ்வதி. தாளம்: ஆதி.

### பல்லவி

மன்றுள் ஆடிய தாண்டவனே—கையில்
மான்மழு ஏந்தி மால்அயன் சூழ்ந்திட —(ம)

### அநுபல்லவி

பொன்மணி சதங்கைகள் பொலிவுடன் ஒலிக்க
பொங்கும் ஆணவப் பேரணங் குடனே —(ம)

### சரணம்

ஆட்டம் கண்டவர் அனைவரும் வியந்தார்
அரவா பரணஉன் ஆற்றலும் தெளிந்தார்
நாட்டமும் கொண்டேன் நடன விநோதா
நங்கை கங்கை நாடும் பாதா —(ம)

# மாணிக்க விநாயகனே!

இராகம் : சக்ரவாகம். தாளம் : ஆதி.

## பல்லவி

மாணிக்க விநாயகனே சரணம்
மலைக்கோட்டைதனில் வாழும் சுகனே —(மா)

## அநுபல்லவி

காணிக்கையென்றே பாமலர் தொடுத்தேன்
கருணையை நாடியுன் கழலிணை அடுத்தேன் —(மா)

## சரணம்

அடியார் போற்றிட அமர்ந்திடும் பரனே
அடும்இடர் போக்கிநல் அருள்தரும் வரனே
தடையே இல்லாத் தரமுயர் ஞானத்
தன்மையில் ஓங்கிடத் தண்ணருள் புரிவாய் —(மா)

# தாயுமானவா!

இராகம்: நாட்டகுறிஞ்சி. தாளம்: ஆதி.

## பல்லவி

திரிசிரா மலையினில் உறையும் தேவா
தெவிட்டா இன்பத் தாயுமானவா —(தி)

## அநுபல்லவி

புரிவாய் திருவருள் புண்ணிய முதல்வா
பொல்லாமை யெல்லாம் நில்லாமை அருள்வாய் —(தி)

## சரணம்

தாயினைக் காணாது தவித்தவள் மகிழ்வுறத்
தாயாய் வந்தே மருத்துவம் புரிந்தாய்
நேயநின் பொன்னடி நெஞ்சினில் பதித்தேன்
நீயே கதியெனும் நினைவினில் நிலைத்தேன் —(தி)

# மலரடி பணிவாய்!

இராகம்: கமாஸ். தாளம்: ஆதி.

### பல்லவி

மட்டுவார் குழலியின் மலரடி பணிவாய்நீ
மலைவள மோங்கும்திரு சிரபுரத்துறை மாதா—(ம)

### அநுபல்லவி

எட்டிட நினைப்பவரை இக்கரை யேற்றிடுவாள்
இகபர சுகமருளி என்றும் காத்திடுவாள் —(ம)

### சரணம்

தாயான இறைவன் தழுவிடும் பூங்கொடியாள்
தலைபெறும் வடிவினளாய்த் தழைத்து மிளிர்கின்றாள்
மாயா விகாரங்களை மாய்ந்திடச் செய்திடுவாள்
மங்கள சாந்தமணம் பொங்கும் வாழ்வளிப்பாள்(ம)

# இனி விசனமில்லை !

**இராகம் : கங்கணாலங்காரி.** **தாளம் : ரூபகம்.**

### பல்லவி

இனி விசனமில்லை—மனமே
இன்பம் இன்பமே —(இ)

### அநுபல்லவி

கனியெனத்திகழ் உயர்கடவுளின்
கருணையைத் தெளிந்தாய் ஆதலின் —(இ)

### சரணம்

உண்மையும் அன்பும் உன்பால்
ஊன்றிடில் என்றும் இன்பமே
தண்மையில்வளர் அரும்பொருளாம்
தற்பரன்அருள் உனக்குண்டாம் —(இ)

# சுந்தர கணபதியே!

இராகம்: ஹம்ஸத்வனி. தாளம்: ஆதி.

## பல்லவி

சுந்தர கணபதியே அருள் நிதியே
சுகமலர்ப் பதமே பணிந்து மகிழ்ந்தேன் —(சு)

## அநுபல்லவி

சந்ததம் அருள்செய் சகலநல் வரனே
சத்திய தமிழினில் சாருமெய்ப் பரனே —(சு)

## சரணம்

நின்பதம் நிதமும் நித்திய தமிழினில்
நினைவொடு பரவிடும் நிலையருள் செய்வாய்
அற்புத சிங்கார கோபுரப் பொலிவுறும்
அழகிய சிக்கலில் அமைந்து விளங்கிடும் —(சு)

# ஞானமாக நினைவாய்!

இராகம்: பைரவி. தாளம்: ஆதி.

## பல்லவி

ஞான மாக நினைவாய்—மனமே
ஞான போதனை வெண்ணெய் நாதனை —(ஞா)

## அநுபல்லவி

கானயின்பமுடன் கனிந்து பாடிய
ஞானசம்பந்தரின் நல்லுரை நாடியே —(ஞா)

## சரணம்

வசிட்டரும் காம தேனுவும் சிக்கலில்
வந்தனை செய்தே உய்ந்தனர் இதமே
கசிந்திடும் அன்பால் கரைந்துரு கிடுவாய்
கடுவினை நைந்திடும் கருணை சார்ந்திடும் —(ஞா)

# சிக்கல் சிங்கார வேலா!

இராகம்: வச்சிரகாந்தி. தாளம்: ஆதி.

பல்லவி

சிக்கல் சிங்கார வேலா—உன்
செந்திரு மேவும் திருவடி தருவாய் —(சி)

அநுபல்லவி

திக்கெல்லாம்உன் திருப்புகழ் பாடும்
தெளிந்த அன்பினில் தினமும் கூடும் —(சி)

சரணம்

கருணை விழிகளும் கனிந்த நோக்கும்
கையில்தனி வேலும் கோல மயிலும்
அருமைவள்ளியும்நல் தெய்வ யானையும்
அமைந்திடக் கண்டேன் அழகினை உண்டேன் –(சி)

# சிக்கல்சீர் பேரழகா!

**இராகம்: கோமேதகப்ரியா.** **தாளம்: ஆதி.**

பல்லவி

சிக்கல்சீர் பேரழகா
சிங்கார வேல்குமரா —(சி)

அநுபல்லவி

பக்க உதவியில்லா—நல்ல
பக்தர்க் கருள்செய் சீலா —(சி)

சரணம்

திருப்புகழ் புனைந்த புலவர்
அருணகிரிப் பேராளர்
விருப்புடன் வந்தனை செய்தார்
வியந்தார் மகிழ்வில் திகழ்ந்தார்
"அழகிய சிக்கற் சிங்கார
வேலவ" என்றுனை அழைத்தார்
அழைத்த அம்மொழி இன்றும்
அன்றும் என்றும் மெய்யே —(சி)

# வேல்நெடுங் கண்ணி அன்னையே!

இராகம்: நாகவல்லி. தாளம்: ஆதி.

பல்லவி

வேல்நெடுங் கண்ணி யன்னையே—சக்தி
வேண்டினேன் தினம் விருப்புடன் உன்னையே –(வே)

அநுபல்லவி

பால்குளம் மருவிடும் பாங்குயர் சிக்கலில்
பண்பான அன்பர் பணிந்திடும் சிலைநல் —(வே)

சரணம்

வெற்றி வேல்தனை வேலனுக் கீந்தாய்
வேலனும் சூரனை வென்றிடச் செய்தாய்
பற்றிடத் துணிந்தேன் பதமல ரிணையே
பாதகம் ஒழித்தே சாதகம் அருள்வாய் —(வே)

# கொப்புடை நாயகி!

இராகம்: கோமளாங்கி. தாளம்: ஆதி.

## பல்லவி

கொப்புடை நாயகி குவலய நாயகி
கோமளப் பரிமள வளமிகு நாயகி —(கொ)

## அநுபல்லவி

ஒப்புனக் குண்டோ இப்புவி தனிலே
எப்பவும் நீயே எனக்கருள் வாயே —(கொ)

## சரணம்

சாந்தமும் தயையும் சார்ந்திடும் உருவாய்
சஞ்சலம் தீர்த்தெனைக் காத்திட வருவாய்
ஏந்துமுன் கருணையை என்றும் மறவேன்
எவர்க்கும் இனிமைசெய் அன்பினைத் துறவேன் —(கொ)

# கண்ணன் மதுர கானம்!

இராகம்: ஹம்ஸாநந்தி. தாளம்: ஆதி.

பல்லவி

கண்ணன் மதுர கானம்—சகியே
கனிவு கொடுக்கும் நல்ல ஞானம் —(க)

அநுபல்லவி

கண்ணன் மதுரமொழி தேன்மொழி— அதைக்
கண்டவர் கொள்வர் என்றும் அதிலே விழி —(க)

சரணம்

மந்தையில் கண்ணன் விந்தைகள் செய்து
மங்கையர் வியக்க கானமும் பெய்து
சிந்தையைக் கொள்ளைகொண்டே சென்றிடுவான்
சிரித்துச் சிரித்தே என்னை வென்றிடுவான் —(க)

# கானம் பொழிவான்!

இராகம்: பிம்ப்ளாஸ். தாளம்: ஆதி.

## பல்லவி

கானம் பொழிவான் கண்ணன்—மதுர
கனிமொழி வாயால் வேய்ங்குழல் கொண்டே—(கா)

## அநுபல்லவி

தீனன் கருணை தேவன் ஞானத்
தேனும் அமிழ்தும் ஊனில் மேவிட —(கா)

## சரணம்

நாத சுகமே நானிலம் யாவும்
போத நிலையினில் போந்திடச் செய்யும்
வேத நயமே விளங்கிடும் கானம்
விண்ணுறை அமரரும் வியந்திடும் கானம் —(கா)

# கொள்ளைகொண்ட கண்ணா!

இராகம்: ஹிந்துஸ்தான் காபி. தாளம்: ஆதி.

## பல்லவி

குழலால் வையகத்தைக் கொள்ளைகொண்ட கண்ணா
கோமள சியாமளப் பரிமள மணிவண்ணா —(கு)

## அநுபல்லவி

அழிதரும் விடந்தோய்ந்த அரவம் காளிங்கனை
அடக்கி அதன்மேலே அற்புதநடஞ் செய்தாய்-(கு)

## சரணம்

பாண்டவர் துயர்தீர்த்தாய் பாரதம் முடித்துவித்தாய்
பண்புயர் அடியவர்க்காய்ப் பலஇடரும் பட்டாய்
ஆண்டருள் புரிந்திடுவாய் அடியவ னைக்கிடுவாய்
அருள்ஞான வழியினில் அறிவையும் தந்திடுவாய்—(கு)

# பேதையர் வாழ்வு!

இராகம்: நீலமணி. தாளம்: ரூபகம்.

### பல்லவி

பிறர்வாழ மனஞ்சகியாப்
பேதையர் வாழ்வு பாழே —(பி)

### அநுபல்லவி

திறமாக உரைத்தேனே
தேர்ந்திடுவாய் நன்னெஞ்சே —(பி)

### சரணம்

தாரணிசேர் உயிரெல்லாம்
தன்னுயிர் போன்றே எண்ணு
பூரண ஞானம் இதுவாம்
புரிந்து நலமே நண்ணு —(பி)

# இராமனைப் பணிவாய்!

இராகம்: ஸ்ரீரஞ்சனி. தாளம்: ஆதி.

### பல்லவி

கருணை இராமனைப் பணிவாய்—மனமே
கர்ம வினைகளை வெல்வாய் தினமே —(க)

### அநுபல்லவி

அருமை வாழ்வை அடைந்தே மகிழ்வாய்
அகலிகை சாபம் அகற்றிய தீனன் —(க)

### சரணம்

ராமனின் நாமம் நாளும் உரைப்பாய்
சேமமும் பெறுவாய் செம்மையுங் காண்பாய்
பூதலம் புகழ்திரு புண்ணிய சீதையின்
காதல் மணாளன் கண்ணிய சீலன் —(க)

# ஜெய ஹநுமானே!

**இராகம் : ஹிந்துஸ்தான் பெஹாக்.** **தாளம் : ஆதி**

பல்லவி

ஜெயஹநுமானே ஜெயசித்தி யருள்வோனே
ஜெகம்புகழ் கண்ணியனே ஸ்ரீராம பக்தனே—(ஜெ)

அநுபல்லவி

புயவலி மிகுந்தோனே புண்ணிய பலத்தோனே
புனிதநல் சேவையிலே இனிமையும் கண்டவனே
—(ஜெ)

சரணம்

ஆண்மையின் வடிவினனே அஞ்சா நெஞ்சினனே
அன்பின் அவதார அருங்குணத் திருவினனே
மாண்புறும் நின்போலே மாநில மீதினிலே
மதியுடன் விளங்கியென்றும் மகிமையுறச் செய்வாய்
—(ஜெ)

# இராமலிங்க குருவே!

இராகம்: சிம்மேந்திரமத்திமம். தாளம்: ஆதி.

## பல்லவி

இராமலிங்க குருவே சரணம்
இன்பக் கருணைத் திருவே சரணம் —(இ)

## அநுபல்லவி

காமக் கருங்கடல் கடந்தமெய்ந் நிலையே
கற்பூர மணசுகம் கமழ்பெருங் கலையே —(இ)

## சரணம்

சாந்தமே பொங்கிடும் சற்குண நிறையே
சன்மார்க்கநெறி சாற்றிய இறையே
காந்தமே அருட்பா மலர்ந்த வேந்தே
கனிச்சுவை அமுதமே காட்சிதந் தாள்வாய் —(இ)

# அருட்பாவைப்போல்!

இராகம்: ஹேமவதி. தாளம்: ரூபகம்.

### பல்லவி

அருட்பாவைப் போல்—தமிழ்
அமுதும் உண்டோ மனமே —(அ)

### அநுபல்லவி

மருள்படர் உணர்வும் மமதைப் பேயும்
மடிந்திடச் செய்யும் அன்பினைப் பெய்யும் —(அ)

### சரணம்

அன்பு வள்ளல் ராமலிங்கம் வந்தார்
அவனி உய்யவே அருட்பா தந்தார்
இன்புறும் கல்லும் அவர்நூல் கண்டால்
என்றும் இனிக்கும் அதனை உண்டால் —(அ)

# கண்ணுள்ள போதே!

இராகம்: திலங். தாளம்: ஆதி.

## பல்லவி

கண்ணுள்ள போதே எண்ணுவோம் வாரீர்
கருத்தில் நிருத்தமிடும் கருணைச் சுடர்த்திருவைக்
—(க)

## அநுபல்லவி

மண்ணுள்ளே புதைந்து மடிவதற்கு முன்னே
மனிதப் பிறவிக்கடன் புனிதமுறச் செய்வோம்-(க)

## சரணம்

அரும்புகழ் கூட்டுவிக்கும் அறப்பணி புரிவோமே
அன்புசெய்தே நாளும் அருள்நிலை தெளிவோமே
இரும்புமனம் கொண்டே ஈனமும் அடையாமல்
இவ்வுலகில் நாமே இன்பமும் பெறுவோமே—(க)

# கற்றதின் பயனென்ன!

இராகம்: தன்யாசி. தாளம்: ஆதி.

### பல்லவி

கற்றதின் பயனென்ன மனமே—அதைக்
கருத்துடன் ஊன்றியே ஆராய்ந்தாயா? —(க)

### அநுபல்லவி

பற்றுடன் அன்புடன் பண்புகள் பெருகிடப்
பயன்தரும் பணிகள் பலவே செய்வாய் —(க)

### சரணம்

பிறர்மனம் புண்படப் பிழைசெய்யாமல்
பேதமும் காட்டிப் பிரிவுசெய்யாமல்
அறமெனும் இறையாம் ஒன்றுண்டெனவே
ஆணவம் நீக்கி அறிந்தே நடப்பாய் —(க)

# காதல் கொண்டேன்!

**இராகம்: ஹமீர்கல்யாணி.** **தாளம்: ஆதி.**

பல்லவி

காதல் கொண்டேன் கருணைத் தமிழே
கனிந்தஉன் இனிமையை நினைந்து நினைந்து —(கா)

அநுபல்லவி

கோதிலாக் கிளிகள் கொஞ்சிடும் போழ்தினில்
கொஞ்சும்உன் பசுந்தமிழ்க் குழைவினைக் கண்டு —(கா)

சரணம்

என்னுளக் கோயிலில் இணைந்திடும் எழிலே
என்றும் அறிஞர்தம் இன்பப் பொழிலே
உன்னுளே என்னை உணரும் உணர்வினில்
ஒன்றிடும் கன்னல் மொழி யமுதின்பால் —(கா)

# தேன்பொழியும் செந்தமிழே!

இராகம்: நீலாம்பரி. தாளம்: ஜம்பை.

பல்லவி

தேன்பொழியும் செந்தமிழே தெவிட்டாத சுவையே
தேசுமிகும் இளங்கன்னி தெய்வத்திரு நிதியே —(தே)

அநுபல்லவி

வானளவும் புகழ்மேவும் வளம்பெற்ற ஒளியே
வள்ளுவரும் மற்றவரும் வாழ்த்தவந்த தெளிவே —(தே)

சரணம்

அன்புணர்வும் அறநெறியும் அளிக்கும்பெரு வாழ்வே
ஆத்ம சிந்தனை யூற்றை அடையச்செயும் வகையே
இன்பப்பணி புரிவழியை இயம்பும் அரு மறையே
ஈகையில்மெய்ஞ் ஞானத்தினில் இணையும் அருள் நிறைவே —(தே)

# கூவவல்லாயோ குயிலே!

இராகம்: மணிரங்கு. தாளம்: ரூபகம்.

பல்லவி

கூவவல்லாயோ குயிலே
தமிழைக் —(கூ)

அநுபல்லவி

நாவெல்லாம் தித்திக்கும் அமிழ்தம்
நம்தமிழ் மொழியிதம் நலமுடன் சொல்லிக் —(கூ)

சரணம்

அகத்திய முனிவர் அருளிய தமிழை
அருட்பா என்னும் அற்புதத் தமிழை
இகத்தில் விளைந்தவர்க் கிளைந்திடும் தமிழை
இனிமையின் பொழிவாய் இலங்கிடும் தமிழைக்
—(கூ)

# கேட்டதுண்டோ கிளியே!

இராகம்: மோஹனம். தாளம்: ஆதி

## பல்லவி

கேட்ட துண்டோ கிளியே—பாரினில்
கேடிலாக் கவிஞன் பாரதி போலவே —(கே)

## அநுபல்லவி

ஊட்டிடும் வீரம் காட்டிடும் கவிதைகள்
நாட்டிற் களித்தான் நாட்ட முடனே —(கே)

## சரணம்

எங்கும் சுதந்திரப் பேச்சே என்றான்
எவரும் சமமெனும் உணர்வினில் நின்றான்
பொங்குமே அவன்புகழ் பூதல மெங்குமே
புனிதத் தமிழும் கனிவுற் றோங்குமே —(கே)

# வண்ணப் பறவை!

இராகம்: தேஷ். தாளம்: ஆதி.

## பல்லவி

வானில் உலாவும் வண்ணப் பறவை
வட்ட மிடுதே பாரடி தோழி —(வா)

## அநுபல்லவி

தேனினும் இனிதாம் செந்தமிழ் இசையைத்
தீங்குரல் கொண்டே பாங்குடன் இசைத்தே —(வா)

## சரணம்

காலம் உணர்ந்தே கடமையைச் செய்வீர்
கருத்தினில் இரக்கமும் கருணையும் கொள்வீர்
ஞாலம் வியந்திடும் ஞானம் அதனுல்
நாளும் சேவைகள் நாட்டுக என்றே —(வா)

# ஓதிடு மனமே!

இராகம்: கமலமனோகரி. தாளம்: ரூபகம்.

பல்லவி

தரமொடு ஓதிடு மனமே
தன்மை விளங்கியின் புறவே —(த)

அநுபல்லவி

பரம்பொருள் படைப்பினில் இங்கே
பாழ்செயும் உயர்வு தாழ்வேது? —(த)

சரணம்

பொய்யும் வஞ்சமும் உலகில்
பொருந்தி நிலைத்திடல் உண்டோ?
மெய்யும் உணர்வுமல் லால்ஒரு
மேன்மையும் மேவுவ துண்டோ? —(த)

# ஆடல் செய்வாய்!

**இராகம்: நாராயணி.** **தாளம்: ஆதி.**

### பல்லவி

ஆடல் செய்வாய் தமிழ்த்திரு அணங்கே
அருமைத் தமிழர் பெருமை வாழ்வுற —(ஆ)

### அநுபல்லவி

பாடலில் கூடும் பைந்தமிழ் அன்னாய்
பண்பினில் விளங்கியுன் அன்பினில் துலங்கிட—(ஆ)

### சரணம்

உனக்கிணை எவரும் உண்டோ? இல்லையே
உலகம் வியக்க அருள்உன் கலையே
மனத்துணை நீயென மதியினில் கொண்டேன்
மருவும்உன் புகழ்த்திரு உருவும் கண்டேன் —(ஆ)

# முழங்கிட வேண்டும்!

இராகம்: கெளளிபந்து. தாளம்: ஆதி.

பல்லவி

முழங்கிட வேண்டும்
எங்கும் தமிழ்ஒலி —(மு)

அநுபல்லவி

முழங்கி யின்பமும் வழங்கிட வேண்டும்
முத்தமிழ் நாதம் வையகம் முழுவதும் —(மு)

சரணம்

வள்ளுவன் குறளும் கம்பன் செய்யுளும்
வளமிகும் இளங்கோ சிலப்பதி காரமும்
தெள்ளிய அருட்பாத் தீம்பால் அமுதமும்
தித்திக்கும் தமிழ்த் திருநலம் காட்டியே —(மு)

# வீரத் தமிழினைப் பாடு!

இராகம்: சுத்தசாவேரி. தாளம்: ஆதி.

பல்லவி

வீரத் தமிழினைப் பாடு—மனமே
விளங்கும் அதன் இனிமையில் கூடு நல் —(வீ)

அநுபல்லவி

வீரமும் தீரமும் இனிமையும் பிறந்திடும்
வீண்வழக் கெல்லாம் வீழ்ந்தே இறந்திடும் —(வீ)

சரணம்

நீயுறும் கவலையை நீக்கிடும் மருந்தாம்
நிலைமிகு சுகந்தரும் அரும்பெரும் விருந்தாம்
தாயுறும் அன்பையும் அறத்தையும் தருமே
தாயென அணுகிடில் அணைத்திட வருமே —(வீ)

# பேரறமே!

இராகம்: சிந்துபைரவி. தாளம்: ஆதி.

### பல்லவி

காவியமும் நல்ல ஓவியமும் சொல்லும்
தேவனமைப் பெல்லாம் மேவும் பேரறமே —(கா)

### அநுபல்லவி

நாதத்தின் நயமும் வேதத்தின் உண்மையும்
கீதத்தின் பொருளும் போதத்தின் உயர்வாம்—(கா)

### சரணம்

ஆத்மசுகம் பெருகும் ஆண்டவன் பணியாலே
ஐம்புலன் சேட்டைகளும் அடங்கிடும் அறிவாலே
சாத்திரம் போற்றிடவே சகலமும் நலமாமே
சத்திய வழிதன்னில் சார்ந்திட பலமாமே —(கா)

# வருக வருக கதிரே!

இராகம் : அமிர்தவர்ஷனி. தாளம் : ஆதி.

பல்லவி

வருக வருக கதிரே—இந்த
வையகம் இன்ப வாழ்வுற நாளும் —(வ)

அநுபல்லவி

பெருகப் பெருக ஒளியே பொழிக
பிணிகள் இடர்கள் பெரிதும் கருக —(வ)

சரணம்

இருளதை ஓட்டிப் பொருளதைக் காட்டி
எங்கும் மங்கள இன்னிசை கூட்டி
அருளதை நாட்டிட அன்புடன் வருக
அறங்கள் திறங்கள் அனைத்தும் தருக —(வ)

# வண்ண மதியே!

இராகம்: கரஹரப்ரியா. தாளம்: ஆதி.

## பல்லவி

வண்ண மதியே வாராய்—என்பால்
வந்தொரு வார்த்தை கூறாய் நல்ல —(வ)

## அநுபல்லவி

விண்ணிடை தவழ்ந்து விளையாடும் உன்றன்
விந்தையைப் பாடச் சிந்தை கொண்டேன் —(வ)

## சரணம்

காதலர் அன்பினில் களிப்பை யூட்டுவாய்
கஞ்சர் நெஞ்சினில் கருணையைப் பொழிவாய்
பூதல மெல்லாம் புண்ணிய மோங்கிப்
புனிதன் தாளிணைப் போற்றிட அருள்வாய் —(வ)

# அழகே அழகே நீ வாழ்க!

**இராகம் : கோபிகாதிலகம்.** **தாளம் : ஆதி.**

பல்லவி

அழகே அழகே நீவாழ்க—புவி
ஆருயிர்க் கெல்லாம் ஆனந்தம் தரும் —(அ)

அநுபல்லவி

பொழிவாய் இன்பம் பொருள்களில் நிறைந்தே
பூரணன் கருணையைப் புகல்வாய் சிறந்தே —(அ)

சரணம்

மலையிலும் நல்ல மானின் நோக்கிலும்
மங்கையர் நடத்திலும் மதிநிறை வானிலும்
கலையிலும் ஞானக் கவிதை அமுதிலும்
கடலிலும் மிளிரும் கற்பகப் பொலிவே —(அ)

# நீதியை மறந்தார்!

**இராகம்: கானடா.** **தாளம்: ஆதி.**

### பல்லவி

*நீதியை மறந்தார் நீள்நர கடைவார்*
*நெடுந்துயர்ப் படுவார் நிச்சயம் மனமே —(நீ)*

### அநுபல்லவி

*ஆதியை மறந்தார் அழிவார் வீணே*
*அறிவால் உயர்வாய் அரும்பயன் பெறுவாய் —(நீ)*

### சரணம்

*கடமையை மறந்தார் கண்ணிய மிழப்பார்*
*கருத்தினை உணர்ந்தார் விருத்தியு மடைவார்*
*திடமுறச் சொன்னேன் தெளிவாய் நீயே*
*தெய்வநல் வழிதனில் உய்வகை காண்பாய் —(நீ)*

# பொல்லாங்கு கல்லவோ பிறந்தாய்!

இராகம்: பௌளி. தாளம்: ரூபகம்.

### பல்லவி

பொல்லாங்கு கல்லவோ பிறந்தாய் நீ
பொறுமையிற் சிறந்தே நிறைந்திடாமல் —(பொ)

### அநுபல்லவி

எல்லாம் வல்லவன் தாளிணை நாளும்
ஏற்றிப் போற்றி நலம் பெறுமல் —(பொ)

### சரணம்

நெஞ்சம் முழுவதும் வஞ்சம் மேவினை
நெடுநாள் வாழ்வெனத் திடமொடு கூவினை
கஞ்சத் தனத்தை மிஞ்சித் தாவினை
கணப்பொழு தாகிலும் கருதினின் ருயோ -(பொ)

# யாரென நினைத்தனையோ!

இராகம்: சஹானா. தாளம்: ஆதி.

### பல்லவி

யாரென நினைத்தனையோ
மனக்குரங்கே —(யா)

### அநுபல்லவி

சீரான அருள்பாடி நேரான வழிநாடி
செம்மை நலம்தேடச் சிந்தித்திடும் என்னை —யா)

### சரணம்

தூய அன்பர்தம் தொடர்பினில் ஓங்கி
துலங்கும் அறிவினில் துன்பமும் நீங்கி
நேயனன் னெஞ்சுடன் நிறைந்து சிறந்திட
நிமலமெய் நெறியினில் நின்றிடும் என்னை —(யா)

# இச்சை பிறந்ததடி!

இராகம்: இராகமாலிகை. தாளம்: திஸ்ரம்.

இச்சை பிறந்ததடி—எங்கும்
இன்பம் சூழ்ந்ததடி
அச்ச, மொழிந்ததடி—மிக்க
ஆனந்தம் பொங்குதடி —(இ)

அடிமை தீர்ந்ததடி—சகியே
ஆண்மை சார்ந்ததடி
மடிமை தொலைந்ததடி—உண்மை
மாண்பு நிலைத்ததடி —(இ)

உரிமை விளைந்ததடி—அன்பு
உணர்வும் மிளிர்ந்ததடி
பெருமை பூத்ததடி—அறிவுப்
பேராசை பொலிந்ததடி —(இ)

சுதந்திர அருணனுமே—எங்கும்
சூழ்ந்து விளங்கினனே
பதமலர் பணிவோமே—ஆண்டவன்
பண்பு விளக்குவமே —(இ)

சுதந்திரம் தந்தசுகம்—சகியே
சொல்லும் திறமாமோ?
இதந்தரும் அதைநினைந்திடில்—சகியே
எண்ணம் ஓங்கிடுமே —(இ)

# பாவியென்னும் நாமம் படையாதே!

**இராகம் : பாகேஸ்ரீ.** **தாளம் : ஆதி.**

### பல்லவி

*பாவியென்னும் நாமம் படையாதே மனமே*
*பாரினில் என்றென்றும் பாதகம் புரிந்தேநீ —(பா)*

### அநுபல்லவி

*ஆவியும் இழந்தாலும் அறந்தனை வழுவாதே*
*அன்பு நெறியினின்றும் அகன்றிட விழையாதே-(பா)*

### சரணம்

*பிறர்குற்றம் கண்டே பிழையும் குறியாதே*
*பேறருள் சன்மார்க்கம் பெரிதும் மறவாதே*
*முறையுடன் உன்கடனே முடிக்கத் தவருதே*
*மூத்தோர் சொல்வழியே முழுவதும் செல்வாயே*
*—(பா)*

*அயல்மாதர் தம்மை அன்னையென்றே நினைப்பாய்*
*அண்டியவர் குறைகள் அன்புடனே தவிர்ப்பாய்*
*கயவராய் நாளும் நயங்கெட நில்லாதே*
*கர்வமும் கொண்டேநீ கருத்தினைத் தள்ளாதே*
*—(பா)*

# உய்வோமே!

இராகம்: சங்கராபரணம். தாளம்: ஆதி.

## பல்லவி

அமரன் காந்தியின் அன்பு நெறியினை
அறிந்தே இதமாய் உய்வோமே —(அ)

## அநுபல்லவி

சமரச உண்மையை சத்திய மேன்மையைச்
சற்குரு எனவே சாற்றினனே —(அ)

## சரணம்

அனைவரும் இன்புற அரும்பணி செய்தான்
ஆவியும் நீத்தான் உயர்வினுக்கே
நினைவுடன் அவன்வழி நின்றிடில் என்றுமே
நித்திய சுகத்தினில் இணைவோமே —(அ)

உலகம் உய்யவே ஒளிவிளக்கேற்றி
ஒற்றுமை உயர்வினைப் போதித்தான்
கலக நெறிகள் கணத்தே மறைந்து
கனசுகம் மேவிட விழைந்திட்டான் —(அ)

திலக மெனவே திகழ்ந்த பெரியோன்
திவ்யன் காந்தி மகாத்மனே
விலக லின்றியே விதித்த வண்ணமே
வேண்டியே நிற்போம் அவனுரையே —(அ)

# காந்தியைப் போற்றுவோமே!

இராகம்: வசந்தா. தாளம்: ஆதி

பல்லவி

காந்தியைப் போற்றுவோமே—நாமே
கண்ணியம் நண்ணிய புண்ணிய நாதன் —(கா)

அநுபல்லவி

சாந்தி யருள்செய் சற்குரு வானுன்
சத்தியம் நித்தியம் சார்ந்திட லானுன் —(கா)

சரணம்

தனக்கென வாழாது பிறர்க்கென வாழ்ந்தான்
தன்னுயிர் தன்னையே தரணிக் கீந்தான்
இனிமைநல் லன்பே இதந்தரும் நெறியாம்
என்றே உரைத்தான் நன்றே தெளிவோம் —(கா)

# அன்பின் நிறைசுடரே!

**இராகம்: தோடி.** **தாளம்: ஆதி.**

பல்லவி

அன்பின் நிறைசுடரே அறத்தின் பேரொளியே
அண்ணல் காந்தியெனும் அருங்குணப் பெருங்கடலே
—(அ)

அநுபல்லவி

இன்பமெல்லாம் பெருகத் துன்பமெல்லாம் கருக
எங்கணும் சமத்துவமே பொங்கும்படிச் செய்தாய்
—(அ)

சரணம்

மகாத்மா என்றே மாநிலமும் போற்றிடவே
மகிமைபல கண்டாய் மாண்பும்பல கொண்டாய்
தகாத நெறியெல்லாம் தானாய் மடிந்திடவே
தயையும் அஹிம்சையுமே தழைத்திடப் பணிபுரிந்தாய்
—(அ)

# காந்தி என்ற நாதமே!

இராகமாலிகை. தாளம்: ரூபகம்.

காந்தி என்ற நாதமே
சாந்தி நல்கும் வேதமே
உலகம் போற்றும் பூரணன்
கலகம் நீக்கும் காரணன் —(கா)

அன்பு மார்க்க போதமே
அவனி யாளப் போதுமே
இன்பன் அவனைப் போலவே
என்று காண்போம் இனியுமே —(கா)

கருணை நிறைந்த உத்தமன்
கடமை புரிந்த வித்தகன்
அருமை சொல்லிப் பாடுவோம்
அன்பில் ஒன்ருய்க் கூடுவோம் —(கா)

வாழ்க காந்தி நாமமே
வணங்கி உய்வோம் நாளுமே
வீழ்க தீமை என்றுமே
விளங்கி உண்மை உயர்வமே —(கா)

# அணையா இன்ப விளக்கே!

இராகம்: புலுஸாமத்திமம். தாளம்: ஆதி.

### பல்லவி

அணையா இன்ப விளக்கே—என்றும்
ஆத்ம ஞானப் பெருக்கே காந்தியே —(அ)

### அநுபல்லவி

இணையே இல்லா நிலையே கண்டாய்
எங்குமே அன்பொளி நிலைக்கவே செய்தாய் —(அ)

### சரணம்

சத்திய ஞானமும் சக்தியும் நிறைந்தாய்
சமரச வாழ்வைச் சார்ந்துமே நின்றாய்
இத்தரை என்றுமே ஏத்திடச் சிறந்தாய்
இதந்தரும் சுதந்திர இன்பமும் தந்தாய் —(அ)

# மாநிலம் வாழ்வுறவே !

**இராகம் : பீலு.** **தாளம் : ஆதி.**

பல்லவி

*மாநிலம் வாழ்வுறவே வந்த மகாத்மா*
*மாபெரும் புனிதாத்மா காந்தி மகாத்மா —(மா)*

அநுபல்லவி

*பாரத நாட்டிற்கிணை பாரினில் இல்லையென்றே*
*சீருடன் யாவருமே செப்பிடும் நிலைதந்தார் —(மா)*

சரணம்

*சாந்தம் அஹிம்சையுமே சத்திய ஞானமுமே*
*சார்ந்திடவே எங்கும் சமரசம் ஓங்கிடவே*
*பாந்தம் மிகுந்திடவே பகர்ந்தார் அன்புநெறி*
*பதம்பணிவோம் அவர்சொல் இதம்மறவோம் நாளும்*
*—(மா)*

தொகையறு

*தன்சுகம் மறந்தென்றும் தாய்நாட்டிற் கெனவே*
*இன்னல்பல கண்டார் இன்னுயிரும் நீத்தார்*
*உத்தமர் காந்தியென்று உலகமும் கொண்டாடும்*
*சித்தராம் அண்ணல் சேவையைத் தெளிந்துயர்வோம்*

சரணம் 2

*அமர வாழ்வடைந்தார் அணையா விளக்கானார்*
*அவர்புகழ் என்றென்றும் அருளொளி நிலையாகும்*
*கமழும் அன்புமணம் கருத்தினில் நுகர்ந்திடுவோம்*
*கருணை மகாத்மா காட்டிய வழிநடப்போம்—(மா)*

# சிந்தித்துப் பாரடா!

இராகமாலிகை. தாளம்: ரூபகம்.

சிந்தித்துப் பாரடா
செல்வத்தமிழ் மகனேநீ
நிந்தைசெய்வதை விட்டிடடா
நீதியெதுவெனக் கேட்டிடடா —(சி)

அறமொன்றே நிலைக்குமடா
ஆத்திரமே குலைக்குமடா
திறமுடனே எதையுமே
தெளிந்திட்டால் இன்பமடா —(சி)

அன்பேதான் வேண்டுமடா
அமைதியைஅது தூண்டுமடா
துன்பமெலாம் போக்குமடா
தூயவனாய் ஆக்குமடா —(சி)

எங்கும்நிறை ஒருபொருளாம்
எல்லாம்அதன் திருவருளாம்
பொங்கும்பெரு ஒளிவிளக்காம்
பொய்மைஅதன் பெருவிலக்காம் —(சி)

உயிரெலாம் அப்பொருளின்
உருவமென்றே அறிந்திடடா
தயைபெருகும் தாழ்வொழியும்
தன்மையிற்சிறந் திடலாமே —(சி)

# கடமை காண்பவன் தீரன்!

இராகம்: தேஷ். — தாளம்: ஆதி.

### பல்லவி

கடமை காண்பவன் தீரன்—அவனே
கருணையும் அன்பும் கனிந்த வீரன் —(க)

### அநுபல்லவி

மடமைப்பேய்க்கிடம் கொடுத்தழியாமல்
மதிகொண்டாய்ந்தே மாட்சி பெருக்கியே —(க)

### சரணம்

சிறுமையும் கொண்டே சிரிழக்காமல்
செல்வமும் கண்டே செருக்கடையாமல்
பெருமையும் பேசிப் பிழைபோகாமல்
பெருநெறி பிடித்தே பேரருளுடனே —(க)

சிட்டி பிரஸ்,
மதுரை ரோடு,
திருச்சி.

மதுரை காமராசர் பல்கலைக்கழ...
அவ்வை
...ண்முகம் நூலகம்.
தமிழ்ப் பல்துறை.